DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 539/2025 |
| Deposition of Witness for | PW 3 |
| Name | சீமைநாச்சியார் |
| Father / Husband Name | ராஜேஸ்வரன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 28th April 2026.

**1வது எதிரி ஆஜர்**
**(2-4 வரையுள்ள எதிரிகள் ஆஜரில்லை. 2-4 வரையுள்ள எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். நான் சத்துணவு அமைப்பாளராக வேலை செய்து ஓய்வு பெற்று விட்டேன் . வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் மகஜர், வரைபடம் என் முன்பாக தயார் செய்யவில்லை. மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என் முன்பாக போலிசார் எந்த இடத்தையும் பார்க்கவில்லை, எந்த சொத்தையும் கைப்பற்றவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

Hostile (அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

தேவகி நாச்சியார் என் தங்கை என்றால் சரிதான். இவ்வழக்கு புகார்தாரர் என் தங்கை மகன் என்றால் சரிதான். இவ்வழக்கு புகார்தாரரும் எதிரிகளும் நீதிமன்றத்திற்கு வெளியே பேசி சமரசமாகி நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். வழக்கு தரப்பினர்கள் சமரசமாகிவிட்டபடியால் கடந்த 20.04.2024 ம் தேதி இரவு 08.50 மணியளவில் எதிரிகளால் எங்களுக்கு ஏற்பட்ட வழக்கு சம்பவத்தை மறைத்தும் மறுநாள் காலை 07.00 மணியளவில் சம்பவ இடத்தை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையில் பார்வையிட்டு மகஜர், வரைபடம் தயார் செய்ததையும் அதன்பின்னிட்டு காலை 08.00 மணிக்கு என் முன்னிலையில் வழக்கு சொத்தை கைப்பற்றியதற்காக அத்தாட்சியிலும் கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக போலிசார் விசாரணையில் சொன்ன சங்கதிகளுக்கு மாறாக தற்சமயம் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**இல்லை

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2026.04.28 18:13:56 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.